DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

| | | |
|---|---|---|
| Calender<br>Miscellaneous<br>Priliminary Register<br>Sessions | Case No | CC 21/15 |
| Deposition of witness for | Prosecution<br>Defence<br>Court | PW 1 |
| Name | | Velusamy |
| Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Caste | | |
| Calling | | |
| Religion | | |
| Age | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

02.07.2019 முதல் விசாரணை:

நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். எம் ஆர் எப் டயர்ஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என் உடன் பிறந்த சகோதரி அந்த நிறுவனத்தை நடத்தி வருகிறார். என் அக்காள் கணவருக்கு சொந்தமாக 4 லாரிகள் உள்ளது. சௌந்தர பாண்டி 3 வருடங்களாக சிவில் சர்வீஸ் ஒப்பந்தக்காரராக உள்ளார். டிஎன் 28 வி 61 62 என்ற பதிவெண் கொண்ட அசோக் லைலெண்ட் லாரி என் அக்காவிற்கு சொந்தமான லாரியை சௌந்தர பாண்டி என்பவர் ஓட்டி வந்தார். அவர் 25.06.2011ம் தேதி தோப்பூரில் அரசு கிட்டங்கியில் இரவு 7 மணிக்கு நிறுத்தியிருந்தார். பின்னர் மறுநாள் காலை வந்துலாரியை பார்க்கும் போது லாரி அந்த இடத்தில் இல்லை பின்னர் அவர் என்னிடம் தகவல் சொன்னார். நானும் என் கம்பெனி ஆட்களும் சென்று தேடிப்பார்த்தோம். கிடைக்கவில்லை. பின்னர் லாரியை மீட்டுத்தருமாறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 26ம் தேதி புகார் கொடுத்தோம். லாரி கிடைத்து விட்டதாக போலிசார் அன்றே தகவல் சொன்னார்கள். மேற்படி லாரியின் டயர் இல்லை. லாரியை நீதிமன்றம் மூலம்மனு செய்து பெற்றுக்கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் கொடுத்த புகார் அ..சா.ஆ,1. காணாமல் போன லாரியின் புகைப்படங்கள் (4 எண்ணம்) சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை:

காணாமல் போன லாரி எனக்கு சொந்தமான லாரி கிடையாது என் அக்காவிற்கு சொந்தமான லாரி. என் அக்காள் நிறுவனத்தின் நிர்வாகத்தை நர்ன் கவனித்து வருவதால் நான் புகார்

கொடுத்தேன். குடோவுனில் நிறைய லாரிகள் கிட்டங்கியில் நிறுத்தியிருப்பார்கள் என்றால் சரிதான். நிறுத்தியிருக்கும் லாரிகள் எந்த நேரமும் கிளம்ப வேண்டியிருக்கும் என்பதால் லாரி ஓட்டுனர் கிளினர் படுக்க வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். சாவியை கிட்டங்கி நிர்வாகத்திடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவத்தன்று லாரி சாவியை யாரிடம் கொடுக்கப்பட்டது என்றால் லாரியின் ஓட்டுனர் சாப்பிட சென்று விட்டதாக சொன்னார். லாரி கிட்டங்கியில் நிறுத்தியிருப்பதாக சொன்னார் அங்கு தான் நிறுத்தியிருந்தாரா என்று எனக்கு தெரியாது. மறுநாள் காணாமல் போனதாக சொல்லும் போது என்னுடன் அவர்புகார் கொடுக்க காவல் நிலையம் வந்தார் என்றால் சரிதான். போலிசார் ஓட்டுனரை விசாரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். என்றால் சரிதான். புகார் கொடுத்து எத்தனை லாரி கிடைத்தது என்றால் நான் புகார் கொடுத்த மறுநாளே கிடைத்து விட்டது. காவல் நிலையத்தில் 27.06.2017ம் தேதி நான் லாரியை பார்த்தேன். அது காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நான் சா.பொ. ஆக சாட்சி சொன்ன லாரியில் அனைத்து டயர்களும் உள்ளது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் லாரியை வாங்கும் போது டயருடன் தான் வாங்கினேன் என்றால் டயரை மாற்றி நான் வாங்கிச்சென்றேன். இந்த விபரங்களை நான் கொடுத்த மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது பற்றி தெரியவிலலை. என் அக்கா தான் மனு செய்து லாரியை நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்டார். அதன் விபரம் எனக்கு தெரியாது. மறுநாள் லாரி கிடைத்த போது நான் காவல் நிலையத்தில் அடையாளம் காண்பித்தேன் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்த பின்னர் நான் போகவிலலை. டயர் மாற்றிய இடத்திற்கு நான் போகவில்லை. எந்த இடத்தில் லாரி இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் கடைசியாக புகார் கொடுத்த பிறகு லாரியை பார்த்த இடம் காவல் நிலையம் டயர் மாற்றிய இடத்தில் நின்றிருந்தது. அதன் பிறகு நான் எந்த வாககுமூலமும் கொடுக்கவில்லை. யார் திருடினார்கள் என்ற விபரம் இன்று வரை எனக்கு தெரியாது. அது பைனான்சிற்கு எடுத்த லாரியா ன்னறு எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்தவாகனம் சேட் தனியார் நிறுவனத்தில் பைனான்சில் பைனான்ஸ் பெற்று எடுத்த லாரி. தவணை கட்டாததால் லாரியை எடுத்து சென்று விட்டனர் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எங்கள் லாரி களவு போகவில்லை என்றால் சரியல்ல.